செ.வெ.எண்.165 நாள்.13.03.2018.

# பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அதிரும் மடக்கு குச்சி வழங்கிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் தகவல்:

பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு தாங்கள் நடக்கும்பொது எதிரே வரும் நபர்கள் மற்றும் இடையூறு அறியும் வண்ணம் அதிரும் மடக்கு குச்சி **Smart Cane** மத்திய அரசு மூலம் வழங்கப்படவுள்ளது. அதிரும் மடக்கு குச்சி **Smart Cane** தேவைப்படும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் கீழ்காணும் சான்றுகளுடன் மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவகம், கொக்கிரகுளம், திருநெல்வேலி தொலைபேசி எண்:0462-2500157 என்ற முகவரியில் விண்ணப்பிக்குமாறு **திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள்** தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தேவைப்படும் சான்றுகள்:**

1.மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை

2.குடும்ப அட்டை

3.ஆதார் அட்டை

4.வருமானச்சான்று ( மாதம் 15000/-க்குள் இருக்கவேண்டும்) ஆகியவற்றின் நகல்கள்

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி